S.T.C. No. : 594/2023

PW2 : ஜெகவீரபாண்டியன் த.பெ. தங்கையாபூபதி

Date : 05.11.2024

**குறுக்கு விசாரணை:**

1. நான் தற்பொழுதும் K.V.R கண்ஸ்ரக்ஸினில் சப்கான்ட்ரக்ராக வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 2019லிருந்து K.V.R கண்ஸ்ரக்ஸினில் சப்கான்ட்ரக்ராக வேலை செய்து வருகிறேன். மேற்படி K.V.R கண்ஸ்ரக்ஸினில் கோயம்புத்துா பாதாளசாக்கடை பணிக்காக டெண்டர் எடுத்தார்கள். அவர்களிடமிருந்து சப்கான்ட்ரக்ட் நான் எடுத்தேன். மேற்படி டெண்டர் ஆர்டரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். மேற்படி கண்ஸ்ரக்ஸினில் பதிவு செய்யப்பட்ட கண்ஸ்ரக்ஸன என்றால் சரிதான். அவர்கள் GST செலுத்திவருகிறார்கள். மேற்படி பதிவு ஆவணம் மற்றும் GST ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். நான் மேற்படி சப்கான்ட்ரக்ராககாக ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை. மேற்படி கண்ஸ்ரக்ஸினின் உரிமையாளர் பெயர் வேல்முருகன். மேற்படி K.V.R கண்ஸ்ரக்ஸினில் கோயம்புத்துாரில் பாதாளபணி டெண்டர் எதுவும் எடுக்கவில்லை என்றும், நான் அங்கு வேலை செய்யவில்லை என்றும், இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் பெயர் சேவீரபாண்டியன் கிடையாது. என்னை யாரும் அப்படி கூப்பிடவும் மாட்டார்கள். K.V.R கண்ஸ்ரக்ஸினின் உரிமையாளர் சொல்லித்தான் எதிரி என்னிடம் வேலைக்கு வந்தார். ஆஜர் எதிரி 2022ம் ஆண்டு 4ம்மாதம் என்னிடம் வேலைக்கு வந்தார். அவர் என்னிடம் டாடா ஏசி டிரைவராக வேலைக்கு வந்தார். எதிரி என்னிடம் 2 வருடங்கள் வேலை செய்தார். அவர் 2வருடமும் டாடா ஏசி டிரைவராக இருந்தார். நான் எதிரியின் ஆதார் கார்டு, ஓட்டுநா உரிமம ஆகியவற்றை வாங்கிவைக்கவில்லை. மேற்படி எதிரியின் தொலைபேசி எண் என்னிடம இல்லை. என்னுடைய சூப்பர்வைசர்கள் சவுந்தர் மற்றும் இன்னொருவருக்கு எதிரியின் அலைப்பேசி எண் தெரியும். நான் மாதம் ஒருமுறையும் அங்கு செல்வேன். புகார்தாரருக்கும், எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் உண்டு என்பது எனக்கு தெரியும். ஆனால் அது நேரடியாக எனக்கு தெரியாது. மேற்படி கொடுக்கல் வாங்கல் உண்டு என்பதை எனக்கு புகார்தாரர்தான் என்னிடம் சொன்னார். புகார்தாரர் எதிரிக்கு ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) கொடுத்ததாக சொல்வதை பற்றி எனக்கு தெரியாது. கோயம்புத்துாரில் 5 இடங்களில் பாதாளசாக்கடை பணி செய்தோம். மேற்படி 5 இடங்களிலும் புகார்தாரர் வேலை செய்தார். புகார்தாராரும் எதிரியும் உக்கடத்தில் பாய் வீட்டில் ஒன்றாகத்தான் தங்கியிருந்தார்கள். புகார்தாரரும், எதிரியும் இதற்கு முன் சந்தித்ததே கிடையாது என்றாலும், புகார்தாரரும் என்னிடம் வேலை செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம வேலை செய்யவில்லை என்றாலும், கேராளவில் உள்ள கோழிக்கோட்டில்தான வேலை செய்தார என்றாலும் சரியல்ல. புகார்தாரார எனது ஊரைச்சேர்ந்தவா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. K.V.R கண்ஸ்ரக்ஸினின் அலுவலகம் பெல்பெர்க் ரோடு, நாகல்நகர், NVGB தியேட்டர் அருகில், திண்டுக்கலில் செயல்பட்டு வருகிறது. மேற்படி உரிமையாளரை விசாரித்தால் இந்த வழக்கின் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். எதிரியை இன்றுதான்

நீதிமன்றத்தில் முதன்முறையாக புகார்தாரர் தனது அலைப்பேசியில் காட்டினார் என்றால் சரியல்ல. மணிகண்டனினின் தந்தை பெயர் சுப்பிரமணியன் என்றால் சரிதான்.